செ.வெ.எண்: 57 / ஜீன் / 2021 நாள்: 15.06.2021

**திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தனிமைப்படுத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்களில் கொரோனா வைரஸ் நோய் தொற்று சிகிச்சை பெற்று பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்தது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

----------------

இன்று(15.06.2021) திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் நோய் தொற்று தொடர்பாக சிகிச்சை பெற்று வந்த திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த 61 நபர்களும், கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த 02 நபர்கள், தனிமைப்படுத்தப்பட்ட சிறப்பு மருத்துவ முகாம்களில் சிகிச்சை பெற்று வந்த 51 நபர்கள் என மொத்தம் 114 நபர்களும் பூரண குணமடைந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பொதுமக்கள் தேவையில்லாமல் வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும். விழித்திரு - விலகி இரு - வீட்டில் இரு என்பதை கடைபிடிக்க வேண்டும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை கொரோனா வைரஸ் நோய்த் தொற்று இல்லாத மாவட்டமாக மாற்றுவதற்கு பொதுமக்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**